APPOLO
STUDY CENTRE

# TNPSC GROUP I / II - PRELIMINARY WORKSHEET

## உச்ச நீதிமன்றம்
## (SUPREME COURT)

- 1935-ம் ஆண்டு சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றம்தான் (Federal court of India) பின்னர் உச்சநீதிமன்றமாகத் தொடர்ந்தது

- இதில் உச்சநீதிமன்றம் உயர்ந்த அடுக்காக உள்ளது. அதன்கீழ் உயர்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்கள் அமைந்துள்ளன.

- அமெரிக்காவில் நீதித்துறை இரட்டை அமைப்பாக (Double System of Courts) உள்ளது கூட்டாட்சிச் சட்டங்களுக்கு கூட்டாட்சி நீதித்துறை (Federal Judiciary) மாநில சட்டங்களுக்கு மாநில நீதித்துறை (State Judiciarry) என அமைக்கப்பட்டு உள்ளது.

- 1935 - இந்திய சட்டத்தின்படி உச்சநீதிமன்றம் ஜனவரி 28 1950 அன்று ஏற்படுத்தப்பட்டது

- இது அமெரிக்க கூட்டாட்சி நீதிமன்றத்தைப்போல் அல்லாமல் இங்கிலாந்து அரசின் மேல் முறையீட்டு அமைப்பான பிரபுக்கள் அவையைப் போல் உள்ளது

இந்தியாவில் நீதிமன்றங்களின் அமைப்பு

↓

இந்திய உச்ச நீதிமன்றம்

↓

உயர்நீதிமன்றங்கள்

↓

மாவட்ட நீதிமன்றகள்

↓

துணை நீதிமன்றங்கள்

## கட்டமைப்பு மற்றும் நியமனம் (Composition and appointment)

**சரத்து 124 : உச்சநீதிமன்ற அமைப்பு முறை**

- தற்போது உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியையும் சேர்த்து 33 நீதிபதிகள் உள்ளனர
- உச்சநீதிமன்றம் நீதிபதி எண்ணிகையை அதிகாரிப்பதற்கு நாடாளுமன்றத்திற்க்கு அதிகாரம் உள்ளது
- நாடாளுமன்றம் மற்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை படிப்படியாக உயர்த்துகிறது1956 இல் பத்து ஆகவும், 1960 இல் பதின்மூன்று ஆகவும், 1977 இல் பதினேழாகவும் அதிகரித்தது 1986 இல் இருபத்தி ஐந்து, 2008 இல் முப்பது மற்றும் 2019 இல் முப்பத்து மூன்று ஆக உயர்ந்துள்ளது

## நியமனம் (Appointment)

| SI. NO | Act (Year) | Maximum number of judges fixed (Excluding chief justice of India) | Maximum number of judges fixed (including chief justice of India) |
|---|---|---|---|
| 1 | Article 124 of the constitution | 7 | 8 |
| 2 | Supreme Court (Number of Judges) Act, 1956 | 10 | 11 |
| 3 | Supreme Court (number of judges) amendment Act, 1960 | 13 | 14 |
| 4 | Supreme court (number of judges) amendment Act, 1977 | 17 | 18 |
| 5 | Supreme Court (number of judges) Amendment Act, 1986 | 25 | 26 |
| 6 | Supreme Court (number of judges) Amendment Act, 2008 | 30 | 31 |
| 7 | Supreme Court (number of judges) Amendment Act, 2019 | 33 | 34 |

- உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்
- குடியரசுத் தலைவர் பிற நீதிபதிகளை தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்து நியமனம் செயகின்றார்
- நீதிபதிகள் நியமனத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதியின் ஆலோசனையைக் கண்டிப்பாக குடியரசுத் தலைவர் ஏற்று கொள்ள வேண்டும்

**ஆலோசனை முறை மீதான சர்ச்சை( Controversy over consulation)**

**முதலாவது நீதிபதிகள் வழக்கு (The First Judges case) 1982**

- கலந்தாலோசித்தால் என்பதை ஒப்புதல் பெறுதல் என்ற பொருளில் விளக்கம் கொள்தல் கூடாது. இது வெறும் கருத்துகள் பரிமாற்றம்தான்

**இரண்டாவது நீதிபதிகள் வழக்கு (The Second Judge Case 1993)**

- முதலாவது நீதிபதிகள் வழக்கில் தெரிவித்த கருத்தை உச்ச நீதிமன்றம் மாற்றிக் கொண்டது
- நீதிபதிகள் நியமனத்தில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஆலோசனையைக் குடியரசுத் தலைவர் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும்
- ஆனால் தலைமை நீதிபதி மூத்த இரு நீதிபதிகளைக் கலந்தாலோசித்த பின்னர்தான் அந்த ஆலோசனையை வழங்க வேண்டும்

**மூன்றாவது நீதிபதிகள் வழக்கு (The Third Judges Case 1998)**

- கலந்தாலோசித்தல் என்பது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்து மட்டும் தான் என்பது பொருள் அல்ல
- தலைமை நீதிபதி மூத்த நான்கு நீதிபதிகளைக் கலந்தாலோசித்து குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்க வேண்டும்
- இதில் இரு நீதிபதிகள் நியமனத்திற்கு எதிராகக் கருத்து தெரிவித்தால் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவருடைய பரிந்துரையை அரசுக்கு அனுப்பக் கூடாது
- உரிய வழிமுறைகளின்படி இல்லாத உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் பரிந்துரையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள தேவையில்லை
- 99வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2014 மற்றும் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டம் 2014.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் கொலிஜியம் முறையை மாற்றி தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் (NJAC)

என்ற புதிய அமைப்பை கொண்டு வந்துள்ளது. இருப்பினும், 2015 இல், உச்ச நீதிமன்றம் 99 வது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் NJAC சட்டம் ஆகிய இரண்டையும் அரசியலமைப்பிற்கு விரோதமானது மற்றும் செல்லாது என்று அறிவித்தது

## நான்காவது நீதிபதிகள் வழக்கு (The Fourth Judge Case 2015)

- நீதிபதிகளை நீதிபதிகள் கொண்ட குழுவால் (Collegium System ) நியமனம் செய்யப்படும் முறையை மாற்றுவதற்காக 99வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 2014 மற்றும் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டம் 2014 ஆகியவை கொண்டுவரப்பட்டன

- ஆனால் உச்ச நீதிமன்றம்2015-ம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில் மேற்கொண்ட சட்டங்கள் அரசியலமைப்பிற்கு எதிரானது செல்லாதது மற்றும் சுதந்திர தன்மையைப் பாதிக்கின்றது எனத் தெரிவித்து அச்சட்டங்களை ரத்து செய்து விட்டது

- தற்போது நீதிபதிகள் குழுவால் நியமனம் செய்யப்படுதல் முறையே தொடர்கின்றது

## தகுதிகள், உறுதிமொழி, ஊதியம் மற்றும் படிகள் (QUALIFICATIONS, OATH AND SALARIES)

### தகுதிகள் (Qualifications)

- இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்

- ஏதாவது ஒரு உயர் நீதிமன்றத்தில் 5 ஆண்டுகள் நீதிபதியாகப் பணியாற்றிருக்க வேண்டும்

அல்லது

- ஏதாவது ஒரு உயர்நீதிமன்றதில் 10 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்க வேண்டும்

அல்லது

- குடியரசுத் தலைவரின் பார்வையில் தலைசிறந்த சட்ட அறிஞராக இருக்க வேண்டும்

- உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பதவியேற்பதற்கு குறைந்த பட்ச வயது வரம்பு எதையும் அரசியலமைப்பு நிர்ணயிக்கவில்லை

### உறுதிமொழிகள் (Oath or Affirmation)

உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்ற உள்ளவர்க்கு குடியரசுத்தலைவர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுவர் உறுதிமொழி செய்து வைக்கின்றார்

- இந்திய அரசியலமைப்பின் மீது உண்மையான நம்பிக்கை மற்றும் அரசியலமைப்பின் படி செயல்படுதல்

- ❖ இந்தியாவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவது
- ❖ அலுவலகத்தின் கடமைகளை முறையாகவும், உண்மையாகவும், திறமை, நியாயத்தீர்ப்புக்கு ஏற்றவாறு சிறப்பாகச் செய்தல்
- ❖ அரசியலமைப்பு மற்றும் சட்டங்களை நிலைநிறுத்துதல்.

**ஊதியம் மற்றும் படிகள் (Salaries and Allowances)**

| **சரத்து 125: நீதிபதிகளின் ஊதியங்கள் மற்றும் படிகள்** |
|---|

- ❖ நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் பிற சலுகைகளைப் பெறுகின்றனர்.
- ❖ பதவிக்காலத்தில் நீதிபதிகள் ஊதியத்தில் எந்த மாற்றமும் செய்ய முடியாது ( நிதி நெருக்கடிநிலை தவிர்த்து).
- ❖ 2018ன் படி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் மாத ஊதியம் 2.80 இலட்சம் பிற நீதிபதிகளின் மாத ஊதியம் 2.50 இலட்சம்
- ❖ ஓய்வு பெறும்போது அவர் பெறும் ஊதியத்தில் 50% ஓய்வு ஊதியமாக வழங்கப்படுகிறது

**பதவிக்காலம் மற்றும் பதவி நீக்கம் முறை (Tenure and Removal)**

**பதவிக்காலம் (Tenure)**

- ❖ 65 வயது அடையும் வரை பணியாற்றலாம்
- ❖ பதவி விலக விரும்பினால் பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்
- ❖ நாடாளுமன்றத்தின் பரிந்துரைப்படி குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்

**நீதிபதிகளை நீக்கும் முறை (Removal of judge)**

- ❖ நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் குற்ற விசாரணை (Impeachment ) மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்யலாம்
- ❖ இதுவரை எந்த நீதிபதியும் பதவி நீக்கம் செய்யப்படவில்லை

**நீதிபதிகள் விசாரணை சட்டம் (1968) (The Judges Enquiry Act 1968)**

- ❖ பதவி நீக்க தீர்மானத்தை எந்த அவையிலும் கொண்டுவரலாம்

❖ மக்களவை உறுப்பினர்கள் (100) அல்லது மாநிலங்களவை உறுப்பினரகள் (50) பேர் கையொப்பமிட்டு அவைத் தலைவரிடம் வழங்க வேண்டும்

❖ அவைத் தலைவர் தீர்மானத்தை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம்

❖ தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணை குழுவை அவைத் தலைவர் ஏற்படுத்த வேண்டும்

❖ அந்தக் குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது நீதிபதி உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் சிறந்த சட்ட வழக்கறிஞர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்

❖ விசாரணைக்குழு விசாரணை செய்து பாராளுமன்றத்திடம் சமர்பிக்கும்

❖ பின்னர் தீர்மானம் ஒவ்வொரு அவையிலும் 2/3 பங்கு உறுப்பினர்களால் சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவருக்கு அனுப்படும்

❖ இறுதியாகக் குடியரசுத்தலைவர் அந்த நீதிபதியைப் பதவி நீக்கம் செய்வார்.

❖ 1991-1993 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த வி. இராமசுவாமிக்கு எதிராக இந்த பதவி நீக்கம் முறை செயல்படுத்தியபோது விசாரணைக் குழுவானது நீதிபதி மீது குற்றம் இருப்பதை உறுதி செய்தது ஆனால் மக்களவையில் காங்கிரஸ் கட்சி வாக்களிக்காமல் புறக்கணித்ததால் பதவிநீக்கம் தடுக்கப்பட்டது

❖ நீதிபதிகளை நீக்குவது தொடர்பாக அரசியல் சாசனத்தில் 'இம்பீச்மெண்ட்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும், இது ஜனாதிபதியை நீக்கும் விசயத்தில்மட்டுமே பயன்படுத்தப்படுகிறது

## தாற்காலி நீதிபதிகள் நியமனம் (ACTING, ADHOC AND RETIRED JUDGES)

குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதியை இந்தியாவின் செயல் தலைமை நீதிபதியாக நியமிக்கலாம்:

1. இந்திய தலைமை நீதிபதி அலுவலகம் காலியாக உள்ள போது
2. இந்திய தலைமை நீதிபதி தற்காலிகமாக இல்லை அல்லது நியமனம் செய்யாமல் இருக்கும் போது
3. இந்தியத் தலைமை நீதிபதி தனது அலுவலகப் பணிகளைச் செய்ய இயலாத போது

## தற்காலிக நீதிபதிகளை நியமித்தல் (Adhoc Judges)

❖ உச்ச நீதிமன்ற செயல்படுவதற்குப் போதுமான நிரந்தர நீதிபதிகள் இல்லாதபோது உச்ச நீதிமன்ற நீதிபதியாவதற்குத் தகுதிபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உண்டு

❖ ஆனால் இந்த நியமனம் செய்யபடுவதற்க்கு முன்பு குடியரசுத்தலைவர் மற்றும் அந்த மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் ஒப்புதல் பெற வேண்டும்

❖ தற்காலிக நீதிபதியாக பணியாற்றும்போது நிரந்தர நீதிபதிக்கு உரிய அனைத்து அதிகாரங்கள் மற்றும் பணப் பயன்களை பெற தகுதியுடைவர்.

## ஓய்வு பெற்ற நீதிபதிகள் (Retired Judge)

❖ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியை தற்காலிக நீதிபதியான செயல்படுமாறு உச்ச நீதிமன்ற கேட்டு கொள்ளலாம்

❖ நியமனம் செய்யப்படுவதற்க்கு முன்பு குடியரசுத்தலைவர் மற்றும் அந்தக குறிப்பிட்ட நீதிபதியிடம் ஒப்புதல் பெற வேண்டும்

❖ பணியாற்றும் போது நிரந்தர நீதிபதிக்கு உரிய அதிகாரங்கள் மற்றும் சலுகைகளைப் பெற தகுதியுடைவர்

## அமைவிடம் மற்றும் நடைமுறை (SEAT AND PROCEDURE)

**சரத்து 130: உச்சநீதிமன்ற அமைவிடம்**

## அமைவிடம் (Seat of Supreme Court)

❖ உச்ச நீதிமன்றத்தின் தலைமையிடம் டெல்லி என அரசியலமைப்பு அங்கீரித்துள்ளது

❖ தேவைபட்டால் இடத்தை மாற்றிக்கொள்ளும் அதிகாரம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு வழங்கப்பட்டு உள்ளது

❖ அரசியலமைப்பு தொடர்பான வழக்குகள் (பிரிவு 143 மற்றும் குடியரசுதலைவரால் மற்றும்

❖ ஆலோசனை கோரி அனுப்படும் வழக்குகளை குறைந்தபட்சம் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும்

❖ இதர வழக்குகள் யாவும் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வால் விசாரிக்கப்படுகின்றன.

## நீதிமன்றத்தின் நடைமுறைகள் (Procedure of the Court)

❖ உச்ச நீதிமன்றம், ஜனாதிபதியின் ஒப்புதலுடன், பொதுவாக நீதிமன்றத்தின் நடைமுறை மற்றும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை உருவாக்க முடியும்.

❖ 143 வது பிரிவின் கீழ் ஜனாதிபதியால் குறிப்பிடபட்டுள்ள அரசியலமைப்பு வழக்குகள் அல்லது குறிப்புகள் குறைந்தது ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

❖ மற்ற அனைத்து வழக்குகளும் ஒற்றை நீதிபதிகள் மற்றும் கொண்ட அமர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன. இவை திறந்த நீதிமன்றத்தால் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன.

## சுகந்திரமான அமைப்பு (INDEPENDENCE OF SUPREME COURT)

❖ இது ஒரு கூட்டாட்சி நீதிமன்றம், மேல்முறையீட்டு உச்ச நீதிமன்றம், குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கான உத்தரவாதம் மற்றும் அரசியலமைப்பின் பாதுகாவலன்

**உச்ச நீதிமன்றத்தின் சுகந்திரத் தன்மையை உறுதிபடுத்தும் கூறுகள்**

## 1. நியமன முறை (Mode of Appointment )

❖ உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் யாவும் நீதிபதிகள் குழுவின் (ஊழடடநபரைஅ) பரிந்துரையின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுகின்றனர்

❖ இது நீதிபதிகள் நியமனத்தில் நிர்வாக துறையின் முழுமையான விருப்ப அதிகாரத்தைக் தடுத்து விடுகிறது.

## 2. பாதுகாப்பான பதவிக்காலம் (Security of Tenure)

❖ நீதிபதிகளுக்குப் பாதுகாப்பான பதவிக்காலம் வழங்கப்பட்டு உள்ளது

❖ அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளின்படிதான் அவர்களை நீக்க முடியும்

❖ குடியரசுதலைவரால் நியமிக்கப்பட்டாலும் அவர் விரும்பும் வரை பதவியில் தொடரலாம் என்ற கோட்டுபாடு நீதிபதிகள் நியமனத்திற்குப் பொருந்தாது

## 3. பணிக்காலம் கட்டுபாடுகள் (Fixed Service Conditions)

❖ நாடாளுமன்ற நிர்ணயிக்கபடும் ஊதியம் மற்றும் பிற சலுகைகளைப் பெற தகுதியுடைவர்கள்

❖ பதவியேற்ற பின்பு வழங்கப்படும் ஊதியம் மற்றும் பிற சலுகைகளில் எந்த மாற்றும் செய்ய இயலாது

## 4. ஊதியம் இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது Expemses charged on consolidatd Fund

❖ நீதிபதிகளுக்கான ஊதியம் சலுகைகள் ஓய்வுதியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் நிர்வாக செலவுகள் யாவும் இந்திய குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது

❖ இந்திய குவிப்பு நிதி வாக்கெடுப்பிற்கு **(Non Votable)** உட்படுத்தப்படுவதில்லை

**5. நீதிபதிகளின் நடத்தைகளை விவாதிக்க இயலாது**
**(Conduct of Judge cannot br Discussed)**

❖ நீதிபதிகளின் பணி தொடர்பான நடத்தைகளை நாடாளுமன்றத்திலோ அல்லது சட்டமன்றத்திலோ விவாதிக்க இயலாது ஆனால் குற்ற விசாரணையின் போது விவாதிக்கலாம்

**6. ஓய்வு பெற்ற பின்பு மீண்டும் பணிபுரிய அனுமதி இல்லை**
**(Ban on Practive after retirement**

❖ பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் எந்த நீதிமன்றத்திலும் மீண்டும் பணியாற்ற முடியாது

❖ இது நீதிபதிகள் விருப்பு வெறுப்பு அற்ற பணியாற்ற அனுமதிக்கின்ற சூழலை ஏற்படுத்துகிறது

**7. அவமதிப்பிற்குத் தண்டனை வழங்கும் அதிகாரம்**
**(Power to Punish for its contempt )**

❖ நீதிமன்ற அவமதிப்பிற்கு யாரையும் தண்டிக்கும் அதிகாரம் உச்ச நீதிமனற்த்திறகு உண்டு

❖ அதனுடைய செயல்கள் மற்றும் முடிவுகளை யாரும் எதிர்க்க இயலாது குற்றம் சாட்ட முடியாது

❖ இது உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் கண்ணியம் மற்றும் மரியாதை ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது

**8. ஊழியர்களை சுகந்திரமாக நியமிக்கும் அதிகாரம் (Freedom to appoint its staff)**

❖ நிர்வாகத் துறையின் குறுக்கீடு இன்றித் தனக்கு வேண்டிய ஊழியர்களைத் தன்னிச்சையாக நியமித்துக் கொள்ளும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு உண்டு

**9. எல்லை வரம்பைக் குறைக்க இயலாது ( Jurisdication cannot curtailed )**

❖ உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் எல்லை வரம்பை நாடாளுமன்றம் குறைக்க இயலாது இவை யாவும் அரசியலமைப்பால் வழங்கப்பட்டு உள்ளன

❖ ஆனால் அதிகாரவரம்பின் எல்லையை விரிவுபடுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு

## உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் வரம்பு
## (Jurisdiction And Powers Of Supreme Court)

- ❖ இந்திய அரசியலமைப்பு உச்சநீதிமன்றத்திற்கு மிக விரிவான அதிகார வரம்பையும் பரந்த அதிகாரங்களையும் வழங்கியுள்ளது

- ❖ இது அமெரிக்க உச்சநீதிமன்றம் போன்ற கூட்டாட்சி நீதிமன்றம் மட்டுமல்ல, இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமும் கூட பிரிட்டி' ஹவுஸ் ஆ.'.ப் லார்ட்ஸ் (பிரிட்டி' பாராளுமன்றத்தின் மேல் சபை) போன்றது.

- ❖ இது அரசியலமைப்பின் இறுதி பாதுகாவலர் மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது மேலும், இது ஆலோசனை மற்றும் மேற்பார்வை அதிகாரங்களைக் கொண்டுள்ளது

- ❖ அரசியலமைப்பின் வரைவுக் குழுவின் உறுப்பினரான ஆலடி கிருஷ்ணசுவாமி ஐயர், "உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள மற்ற உச்ச நீதிமன்றங்களைக் காட்டிலும் இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் உள்ளன" என்று சரியாகக் குறிப்பிட்டார்.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:**

**(The jurisdiction and powers of the Supreme Court can be classified into the following)**

- **முதல் ஏற்பு அதிகார வரம்பு (Original Jursdiction)**
- **நீதிப்பேராணை அதிகார வரம்பு (Writ Jurisdiction)**
- **மேல் முறையிட்டு அதிகார வரம்பு (Appellate Jurisdiction)**
- **ஆலோசனை வழங்கும் அதிகார வரம்பு (Advisory Jurisdiction)**
- **ஆவண நீதிமன்ற அதிகார வரம்பு (A Court of Record)**
- **நீதிப்புனராய்வு அதிகாரம்.**

### 1) முதல் ஏற்பு அதிகார வரம்பு (Original Jursdiction) பிரிவு 131

**சரத்து 131 : உச்சநீதிமன்றத்தின் முதலேற்பு அதிகார வரம்பு**

ஒரு கூட்டாட்சி நீதிமன்றமாக, உச்ச நீதிமன்றம் இந்திய கூட்டமைப்பின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே உள்ள தகராறுகளைத் தீர்த்து வைக்கிறது

- ❖ மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்கள்.
- ❖ மாநில அரசுகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்கள்
- ❖ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்கள். அரசுகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றை தீர்த்து வைப்பது முதல் ஏற்பு அதிகார வரம்பு ஆகும்

- மாநில நீதிமன்றங்கள் இந்த வழக்கினை விசாரிக்க முடியாது உச்ச நீதிமன்றம்தான் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாக செயல்படுகிறது
- மேலும் கூட்டாட்சி வழக்குகளில் உச்சநீதிமன்றத்திற்கு பிரத்தியேக அசல் அதிகார வரம்பு உள்ளது வேறு எந்த நீதிமன்றம் அத்தகைய வழக்குகள் மற்றும் அசல் வழிமுறைகளை முடிவுசெய்ய முடியாது அத்தகைய வழக்குகளை முதல் நிகழ்வில் விசாரிக்கும் அதிகாரம், மேல்முறையீடு முலம் அல்ல

2) **நீதிப்பேராணை அதிகார வரம்பு (Writ Jurisdiction) பிரிவு 139**

- அடிப்படை உரிமைகளை செயல்படுத்த வேண்டி பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுவினைத் தொடுக்கலாம்

- அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே நேரடியாக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும்

- ஆனால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மற்றும் பிற நோக்கங்களுக்கும் நீதிப்பேராணை மனுவினைத் தாக்கல் செய்யலாம்

- உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வரம்பு உச்ச நீதிமன்றத்தைவிட அதிகமாக உள்ளது.

- அதேபோல் எந்த ஒரு நீதிப்பேராணை மனுவை விசாரிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றம் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கலாம்

**3) மேல் முறையிட்டு அதிகார வரம்பு (Appellate Jurisdiction)**

- உச்ச நீதிமன்றம் முதன்மை மேல்முறையீட்டு நீதிமன்றமாகும் மற்றும் கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிக்கிறது.

- இது நான்கு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தக்கூடிய பரந்த மேல்முறையீட்டு அதிகார வரம்பைக் கொண்டுள்ளது:
  - அரசியலமைப்பு வழக்குகள் (பிரிவு 132)
  - உரிமையியல் வழக்குகள் ( பிரிவு 133)
  - குற்றவியல் வழக்குகள் ( பிரிவு 134)
  - சிறப்பு வழக்குகள் (பிரிவு 136)

## அரசியலமைப்பு வழக்குகள் (Constitutional matters)

❖ மாநில உயர்நீதிமன்றங்கள் அரசியலமைப்பு வழக்குகளை விசாரித்து வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீடுகள் செய்துபோது அதனை உச்சநீதிமன்றம் விசாரிக்கின்றன. மேலும் இந்த வழக்குகளில் அரசியலமைப்பு சட்ட விளக்கம் தேவை என உயர்நீதிமன்றம் சான்றிதழ் மட்டுமே அவ்வழக்குகளை உச்சநீதிமன்றம் முன் கொண்டு செல்லும்.

## உரிமையியல் வழக்குகள் (Civill matters)

உரிமையியல் வழக்குகளில் உயர்நீதிமன்றம் சான்றளித்தால் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படுகிறது

❖ பொது முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள்
❖ உச்சநீதிமன்றத்தல் தீர்மானிக்கபட்ட வழக்குகள்

## குற்றவியல் வழக்குகள் (Criminal matters)

❖ உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் வழக்குகளின் தீர்ப்புகளுக்கு எதிராக மேல்முறையீடு மூலம் உச்சநீதிமன்றம் விசாரிக்கிறது.
❖ குற்றவியல் வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடுக்கு ஏற்றது என சான்றளித்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளபடுகிறது.

## சிறப்பு வழக்குகள் (Appeals by special leave)

❖ நாட்டில் உள்ள எந்தவொரு நீதிமன்றமும் அல்லது (இராணுவ நீதிமன்றம் மற்றும் இராணுவ நீதிமன்றத்தைத் தவிர) இயற்றும் எந்தவொரு விசயத்திலும் எந்தவொரு தீர்ப்பிலிருந்தும் மேல்முறையீடு செய்ய உச்ச நீதிமன்றம் தனது விருப்பப்படி சிறப்பு அனுமதி வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

## 4) ஆலோசனை வழங்கும் அதிகார வரம்பு (Advisory Jurisdiction) பிரிவு 143

❖ பிரிவு 143, கீழ்க்கண்ட இரு நிகழ்வுகளில் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கின்றது
❖ பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை அல்லது சட்டம் தொர்பாக எழும் சந்தேகங்களை தீர்பதற்கு குடியரசு தலைவர் ஆலோசனை கேட்கலாம்
❖ இவ்வகை ஆலோசனை கேட்கப்படும் போது அதற்கு உச்சநீதிமன்றம் தனது ஆலோசனையை வழங்கலாம்.
❖ உச்சநீதிமன்றம் அந்த விவகாரத்தில் சட்ட சம்பந்தமான ஆலோசனை கொடுத்தால் அந்த ஆலோசனை குடியரசுத் தலைவரட் கட்டுபடுத்தாது
❖ அரசியலமைப்புச் செயல்பாட்டிற்கு வருவதற்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து உடன் படிக்கைகள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டதால் உச்சநீதிமன்றம் ஆலோசனை கேட்லாம் உச்சநீதிமன்றம் வழங்கும் ஆலோசனை குடியரசுத்தலைவரை கட்டுபடுத்தும்

- ➢ 1960 இல் பெருபாரி யூனியன்
- ➢ 1992ல் காவிரி நதிநீர்ப் பிரச்னை தீர்ப்பாயம்
- ➢ ராம ஜென்ம பூமி வழக்கு 1993

## 5) ஆவண நீதிமன்ற அதிகார வரம்பு ( A Court of Record) பிரிவு 129

**சரத்து 129: உச்சநீதிமன்றத்தின் நீதிமன்ற பதிவேடுகள்**

- ❖ உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் செயல்முறைகள் மற்றும் செயல்கள் யாவும் ஆவணங்களாகக் கருத்தப்பட்டுப் பின்பற்றப்பட வேண்டும்
- ❖ நீதிமன்ற அவமதிப்பிற்குத் தண்டனை வழங்குதல் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திறகு உண்டு ( தண்டனை ஆறு மாத காலம் சிறைத்தண்டனை அல்லது 2000 ருபாய் அபாரதம் அல்லது இரண்டும்)

## 6) நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் (1971) (Contempt of court Act)

- ❖ 1961 ஆம் ஆண்டில், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டத்தை ஆய்வு செய்ய, அப்போதைய இந்திய கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக இருந்த ஹெச்.என்.சன்யால் தலைமையில் ஒரு சிறப்புக் குழுவை அரசாங்கம் நியமித்தது.

- ❖ இந்தக் குழு தனது அறிக்கையை 1963 இல் சமர்ப்பித்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நீதிமன்ற அவமதிப்புச் சட்டம், 1971 நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

**நீதிமன்ற அவமதிப்புகளாக பின்வருவற்றில் கருதப்படுகிறது**

a. நீதிமன்ற தீர்ப்புகளுக்கு கீழ்பணிய மறுத்தல்
b. நீதிமன்றத்திற்க்கு அவமதிப்பு ஏற்படுமாறு நடந்து கொள்ளுதல்
c. நீதிமன்ற நடவடிக்கையில் குறுக்கிடுதல்
d. நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிரான விமர்சனம் செய்தல்

## 7) நீதிப்புனராய்வு அதிகாரம் (Power of judicial Review)

- ❖ சட்டமன்றத்தாலோ அல்லது நாடாளுமன்றத்தாலோ இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் நிர்வாகத் துறையால் வெளியிடப்படும் ஆணைகள் அரசியலமைப்பிற்கு எதிரானதாக இருந்தால் அது செல்லுபடி அற்றது என்று கூறும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு

## 8) அரசியலமைப்பு விளக்கம் (Constitutional interpretation)

- ❖ அரசியலமைப்பின் இறுதி மொழிபெயர்ப்பாளர் உச்ச நீதிமன்றம். இது அரசியலமைப்பின் விதிகளின் மற்றும் உள்ளடக்கம் அரசியலமைப்பில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளுக்கு இறுதி பதிப்பைக் கொடுக்க முடியும்.
- ❖ அரசியலமைப்பு விளக்கும்போது உச்ச நீதிமன்றம் பல கோட்டுபாடுகளால் வழிநடத்தபடுகிறது

### உச்சநீதிமன்றத்தின் பல்வேறு கோட்டுபாடுகள் (Doctrine of Supreme court)

- ❖ துண்டிக்கக்கூடிய கோட்பாடு (Doctrine of severbility)
- ❖ கிரகண கோட்பாடு (Doctrine of Eclipse)
- ❖ பித் மற்றும் பொருள் கோட்பாடு (Doctrine of OPith and substance)
- ❖ வண்ணமயமான சட்டத்தின் கோட்பாடு (Doctrine of Colourable Legislation)

## 9) இதர அதிகாரங்கள் (Other Powers)

- ❖ தன்னுடைய தீர்ப்பை மறு ஆய்வு செய்யும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு(பிரிவு -137)
- ❖ குடியரசுத்தலைவர் மற்றும் துணைக் குடியரசுத்தலைவர் ஆகியோர் தொடர்பான தேர்தல் வழக்குகளைத் தீர்த்து வைத்தல்
- ❖ இந்திய அரசியலமைப்பில் உள்ள எந்த ஒரு பொருளுக்கும் இறுதி விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு
- ❖ குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டால் மத்திய பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்களின் நடத்தை குறித்து விசாரித்து அறிக்கை அளிக்கிறது தவறு செய்தது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்கின்றது இதில் உச்சநீதிமன்றத்தின் பரிந்துரையைக் குடியரசுத்தலைவர் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும்
- ❖ உயர்நீதிமன்றத்தில் உள்ள எந்த ஒரு வழக்கையும் தனக்கு மாற்றி அதை முடித்து வைக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு அதேபோல் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கை மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றும் அதிகாரமும் உண்டு
- ❖ இதனுடைய சட்டங்களை இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஏற்ப பின்பற்றப்பட வேண்டும்
- ❖ இந்தியாவில் செயல்படும் நீதிமன்றங்கள் மற்றும் தீர்பாயங்களைக் கண்காணிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு

## முக்கிய சட்டப்பிரிவுகள் (Important Articles)

| சட்டப்பிரிவுகள் | | பொருள் |
|---|---|---|
| 1 | சரத்து 124 | உச்சநீதிமன்றத்தின் அமைப்பு |
| 2 | சரத்து 124C | நாடாளுமன்றத்தின் சட்டடமியற்றும் அதிகாரம் |
| 3 | சரத்து 125 | நீதிபதிகள் ஊதியம் தொடர்பாக |
| 4 | சரத்து 126 | தலைமை நீதிபதி நியமனம் |
| 5 | சரத்து 127 | தற்கால நீதிபதிகள் நியமனம் |
| 6 | சரத்து 128 | உச்சநீதிமன்ற அமா்வில் ஓய்வுபெற்ற நீதிபதிகள் இடம்பெறுதல் |
| 7 | சரத்து 129 | ஆவண நீதிமன்றம் |
| 8 | சரத்து 130 | உச்ச நீதிமன்றத் அமைவிடம் |
| 9 | சரத்து 131 | முதல் ஏற்பு அதிகார வரம்பு |
| 10 | சரத்து 132 | உயர்நீதமன்ற வழக்கின் மீது மேல்முறையீடு |
| 11 | சரத்து 133 | உரிமையியல் வழக்குகளில் மேல்முறையீடு |
| 12 | சரத்து 134 | குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீடு |
| 13 | சரத்து 136 | சிறப்பு அனுமதி மேல்முறையீடு |
| 14 | சரத்து 137 | தீர்ப்பை மறு ஆய்வு செய்தல் |
| 15 | சரத்து 138 | உச்சநீதிமன்றத்தின் விரிந்த அதிகார வரம்பு |
| 16 | சரத்து 139A | சில வழக்குகளை மாற்றம் செய்தல் |
| 17 | சரத்து 140 | துணை அதிகாரங்கள் |
| 18 | சரத்து 141 | இந்தியாவின் மிக உயரந்த நீதிமன்றமான உச்சிநீதிமன்றம் துணை நீதிமன்றத்தை மேற்பார்வை செய்கிறது |
| 19 | சரத்து 142(1) | **நீதிமன்றத்தின் தனித்துவமான அதிகாரம்**<br><br>பிரிவு 142 இன் உட்பிரிவு 1 உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு தனித்துவமான அதிகாரத்தை வழங்குகிறது<br><br>முழுமையான நீதி உறுதி செய்வதற்க்கு இந்த விதியின்படி, உச்ச நீதிமன்றம் நியாயமானது என்று கருதும் எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்க முழு உரிமை உண்டு.<br><br>**முக்கிய தீர்ப்புகள் தொடர்பான வழக்குகள்**<br>i. ஏ. ஜி. பேரறிவாளன் மற்றும் பிற குற்றவாளிகள் விடுதலை<br>ii. போபால் வாயுகசிவு துயரசம்பவ வழக்கு<br>iii. மது விற்பனை தடை வழக்கு |
| 20 | சரத்து 143 | குடியரசுத்தலைவர் உச்சநீதிமன்றத்தைக் கலந்தாலோசித்தல் |
| 21 | சரத்து 144 | உரிமையியல், குற்றவியல் நிதித்துறை அதிகாரிகள் உச்சநீதிமன்றத்திற்கு உதவுதல் |
| 22 | சரத்து 145 | நீதிமன்ற விதிகள் |
| 23 | சரத்து 145(4) | திறந்த நீதிமன்ற தீர்ப்பு |
| 24 | சரத்து 146 | உச்சநீதிமன்றத்தின் அலுவலா்கள், பணியாளா்களின் செலவுகள் |

**மாஸ்டர் ஆ.்.ப் ரூஸ்டர் (Master of Ruster)** : உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி 'மாஸ்டர் ஆ.்.ப் ரூஸ்டர்' என்று அழைக்கப்படுகிறார்.

**அமிகஸ் கியூரி (Amicus Curiae)**: அமிகஸ் என்பது வழக்கில் ஒரு தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தாத, நீதிமன்றத்தின் முன் உள்ள விஷயத்தில் நீதிமன்றத்திற்கு உதவ நியமிக்கப்பட்ட ஒரு வழக்கறிஞர் ஆவார்.

**இரண்டாவது நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் (ARC)** அறிக்கையில் நீதித்துறை தொடர்பான சில குறிப்பிட்ட பரிந்துரைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **தேசிய நீதித்துறை ஆணைக்குழு**: நீதிபதிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றை மேற்பார்வையிட தேசிய நீதித்துறை ஆணைக்குழுவை அமைக்க ARC பரிந்துரைத்தது.

2. **நீதிபதிகள் நியமனம்**: இந்திய தலைமை நீதிபதி, சட்ட அமைச்சர் மற்றும் பிற பங்குதாரர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் வகையில், வெளிப்படையான மற்றும் தகுதி அடிப்படையிலான செயல்முறையின் மூலம் நீதிபதிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று இந்திய நீதிபதிகள் ஆணையம் பரிந்துரைத்தது.

3. **மாற்று தகராறு தீர்க்கும் முறைகள்:** நீதித்துறையின் சுமையைக் குறைக்க, மத்தியஸ்தம் மற்றும் நடுவர் தீர்ப்பு போன்ற மாற்று தகராறு தீர்க்கும் முறைகளை ஊக்குவிக்க ARC பரிந்துரைத்தது.

4. **நீதிமன்ற மேலாண்மை:** மின்னணுத் தாக்கல், மின்னணு சேவை மற்றும் காணொளிக் கலந்துரையாடல் உள்ளிட்ட நவீன நீதிமன்ற மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்த ARC பரிந்துரைத்தது.

5. **நீதித்துறை உள்கட்டமைப்பு:** நீதித்துறை கட்டிடங்கள், நூலகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் உள்ளிட்ட நீதித்துறை உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும்படி ARC பரிந்துரைத்தது.

6. **கிராம நீதிமன்றங்கள்**: கிராமப்புற சமூகங்களும் அணுகக்கூடிய மற்றும் மலிவு விலையில் நீதி வழங்க கிராம நீதிமன்றங்களை (கிராம் நியாயாலயாஸ்) அமைக்க மத்திய அரசு பரிந்துரைத்தது.

## <u>நீதிப்புனராய்வு</u> (Judicial Review)

- நீதிப்புனராய்வு என்ற கருத்து அமெரிக்க நாட்டில் உருவானது
- 18033 ஆம் ஆண்டு மார்பூரி – எதிர் - மாடிசன் (Marbury V Madison ) வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்ற முன்னால் நீதிபதி ஜான் மார்சல் என்பவர்தான் முதன்முதலில் இக்கருத்தை முன் மொழிந்தார்
- இந்தியாவில் நீதிப்புனராய்வு என்பது இந்திய அரசியலமைப்பில் சேர்க்கபட்டு உள்ளது
- இந்தியாவில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம்நீதிபுனராய்வு அதிகாரத்தை பெற்றுள்ளன

❖ நீதிபுனராய்வு என்பது அரசியலமைப்பின் அடிப்படைப் பண்பு ( Basic Structure of the Constitution) என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது

**பொருள்**

❖ நாடாளுமன்றத்தாலோ அல்லது சட்டமன்றகளினாலோ இயற்றபடும் சட்டங்கள் மற்றும் மற்றும் நிர்வாக துறையால் வெளியிடப்படும் ஆணைகள் அரசியலமைப்பிற்கு முரணாக இருந்தால் அவை செல்லுபடி அற்றது (null and Void) என்று கூறும் நீதிமன்றத்தின் அதிகாரம்தான் நீதிப்புனராய்வு

**முக்கியத்துவம்**

நீதிபதி சையத் ஷா முகமது குவாட்ரி, நீதித்துறை மறுஆய்வை பின்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார்.

❖ அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தல்

❖ கூட்டாட்சிச் சம நிலையின் பராமரித்தல்

❖ குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கல்

**உச்ச நீதிமன்றத் நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்திய வழக்குகள்**

1. கோலக் நாத் வழக்கு (1967)
2. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட வழக்கு (1970)
3. மன்னர் மானியம் ஒழிப்பு வழக்கு (1917)
4. கேசவனந்த பாரதி வழக்கு (1973)
5. மினர்வா மில்ஸ் வழக்கு (1980)
6. தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டம் 2015

❖ 2015 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் 99 வது அரசியலமைப்பு திருத்தம், 2014 மற்றும் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் (NJAC) சட்டம், 2014 ஆகிய இரண்டும் அரசியலமைப்பிற்கு முரணானது மற்றும் செல்லாது என்று அறிவித்தது.

**நீதித்துறை மறுஆய்வுக்கான அரசியலமைப்பு விதிகள்**
**(Constitutional Provsions for Judicial reviews)**

❖ ‘நீதித்துறை மறுஆய்வு’ என்ற சொற்றொடர் அரசியலமைப்பில் எங்கும் பயன்படுத்தப்படவில்லை என்றாலும், பல சட்டப்பிரிவுகளின் விதிகள் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு நீதித்துறை மறுஆய்வு அதிகாரத்தை வெளிப்படையாக வழங்குகின்றன.

❖ அடிப்படை உரிமைகளுக்கு முரணான அல்லது இழிவுபடுத்தும் அனைத்து சட்டங்களும் செல்லுபடியாகாது என்று 13வது பிரிவு அறிவிக்கிறது.

❖ பிரிவு 32, அடிப்படை உரிமைகளை அமலாக்குவதற்காக உச்ச நீதிமன்றத்தை நாடுவதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்துகிறது மற்றும் அதற்கான வழிகாட்டுதல்கள் அல்லது உத்தரவுகள் அல்லது ரிட்களை வெளியிட உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

## நீதித்துறையின் அதிதீவிரச் செயல்பாடுகள் (judicial Activism)

❖ இக்கருத்து உருவாகி வளர்ந்த இடம் **அமெரிக்கா**

❖ 1947-ல் இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் ஆர்தர் சிலே சிங்கர் (Arthur Schlesinger)

❖ 1970களின் மத்தியில் இந்தியாவில் இக்கோட்பாட்டை அறிமுகம் செய்தவர் நீதிபதி வி.ஆர். கிருஷ்ண அய்யர்.

❖ அடித்தளமிட்டவர்கள் நீதிபதி பி. என். பகவதி நீதிபதி ஒ. சின்னப்ப ரெட்டி மற்றும் நீதிபதி டி.ஏ தேசாய் ஆகியோர்கள்

❖ நீதித்துறையின் அதிதீவர செயல்பாட்டின் விளைவு தான் பொது நல வழக்குகள்

❖ நீதித்துறை செயல்பாடு என்பது குடிமக்களின் உரிமைகளைப் பாதுகத்தல் மற்றும் சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு நீதித்துறை விரைவாக செயல்படும் செயல்.

❖ மற்ற வகையில் சொல்வதென்றால் சட்டமன்றத் மற்றும் நிர்வாகத் துறை ஆகியன தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளைச் செய்யாதபோது அவற்றை விரைந்து செய்திட நீதிதுறை முன்னெடுக்கும் செயல்

❖ ”நீதித்துறை செயல்பாடு என்பது நீதிபதிகளால் சட்டம் இயற்றும் செயல்முறையாக வரையறுக்கப்படுகிறது.

❖ இது ஒரு நீதிபதியால் தற்போதுள்ள சட்டத்தின் செயலில் விளக்கமளிப்பதைக் குறிக்கிறது, சமூக மேம்பாட்டிற்காக அந்தச் சட்டத்தின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் செய்யப்படுகிறது.

## பொது நல வழக்கு (Public Interest Litigation)

❖ 1960 –ம் ஆண்டுகளில் அமெரிக்க நாட்டில்தான் பொது நல வழக்கு என்ற கருத்து உருவாகி வளர்ச்சிடையந்தது

❖ இந்தியாவில் நீதித்துதுறையின் அதிதீவிரச் செயல்பாட்டின் விளைவாகத்தான் பொதுநல வழக்கு உருவானது

- ❖ இந்தியாவில் 1980 –ம் ஆண்டின் துவக்கத்தில் இக்கருத்தை உருவாக்கியவர்கள் நீதியரசர் வி. ஆர் கிருஷ்ண அய்யர் மற்றும் நீதியரசர் பி. என் பகவதி.
- ❖ இது சமூகப் பணிக்கான வழக்கு ( Social Action Litigation) சமூக நலத்திற்கான வழக்கு (Social Interest Litigation) மற்றும் வகுப்பு நலத்திற்கான வழக்கு (Class Action Litigation ) என்றும் அழைக்கபடுகிறது

## பொருள் (Meaning of PIL)

- ❖ பாதிக்கபட்டவர்களின் நலன்களை நீதிமன்றத்தின் மூலம் பெறும் நடவடிக்கைதான் பொது நல மனு
- ❖ பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக யார் வேண்டுமானாலும் வழக்குத் தொடுக்கலாம்
- ❖ தொடுக்கப்படும் மனுவில் மக்கள் நலன் அல்லது பொது நலன் இருக்க வேண்டும்

## நோக்கம்

- ❖ சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல்
- ❖ சமூக மற்றும் பொருளாதார நலிவடைந்த மக்களுக்கு நீதியைப் பெற வழிவனை செய்தல்
- ❖ அடிப்படை உரிமைகளின் பொருளை உணரச் செய்தல்

## பொது நல வழக்கில் எழுப்பப்டும் கோரிக்கைள் (Scope of PIL)

1. பிணையத் தொழிலாளர்கள் பிரச்சனை
2. புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பாக
3. பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்காதது பணியாளர்கள் மீதான சுரண்டல் மற்றும் தொழிலாளர் சட்ட விதிமீறல்கள்
4. சிறைகைதிகள் மரணம் அத்துமீறல்கள் விடுதலை செய்தல் போன்றவை
5. பெண்கள் மீதான அத்துமீறல்கள்
6. காவல் அத்துமீறல்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுத்தல்
7. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் மீதான தாக்குதல்கள்
8. குடும்ப ஓய்வு ஊதியம்
9. கலவரத்தால் பாதிக்கப்படுவர்கள் தொடர்பாக

APPOLO STUDY CENTRE

# மாநில உயர்நீதிமன்றம்
# (High Court)

- இந்திய ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை அமைப்பில், உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்திற்குக் கீழ் செயல்படுகிறது ஆனால் துணை நீதிமன்றங்களுக்கு மேலே செயல்படுகிறது

**சரத்து 214: ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர்நீதிமன்றங்கள் அமைக்க வழிவகுக்கிறது**

- ஒரு மாநிலத்தில் உள்ள நீதித்துறை உயர்நீதிமன்றம் மற்றும் துணை நீதிமன்றங்களின் படிநிலை கொண்டுள்ளது

- 1862 ஆம் ஆண்டு கல்கத்தா, பம்பாய் மற்றும் மெட்ராஸ் ஆகிய இடங்களில் உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டபோது உயர் நீதிமன்ற அமைப்பு இந்தியாவில் உருவானது.

- இந்த உயர் நீதிமன்றங்களும் இந்திய உயர் நீதிமன்றச் சட்டம், 1861 விதியின் கீழ் அமைக்கப்பட்டன.

- 1866-ல் நான்காவது நீதிமன்றமாக அலகாபாத் உயர்நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது

**சரத்து 231: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தை அமைக்க வழிவகுக்கிறது**

- இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றத்தை வழங்குகிறது, ஆனால் 1956 இன் ஏழாவது திருத்தச் சட்டம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்திற்கு ஒரு பொதுவான உயர் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு பாராளுமன்றத்தை அங்கீகரித்தது.

- தற்போது(2019)ன்-படி 25 நீதிமன்றங்கள் உள்ளன

- எட்டு ஒன்றிய பிரதேசங்களில், டெல்லிக்கு மட்டும் தனி உயர்நீதிமன்றம் உள்ளது (1966 முதல்). ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவான உயர்நீதிமன்றம் உள்ளது. மற்ற யூனியன் பிரதேசங்கள் வெவ்வேறு மாநில உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவை.

- அரசியலமைப்பின் பகுதி VI இல் 214 முதல் 231 வரையிலான பிரிவுகள் உயர் நீதிமன்றங்களின் அமைப்பு, சுதந்திரம், அதிகார வரம்பு, அதிகாரங்கள், நடைமுறைகள் மற்றும் பலவற்றைக் கொண்டுள்ளது

## நியமனம் மற்றும் அமைப்பு (Composition and Appointment)

### அமைப்பு (Composition)

**சரத்து 216: உயர்நீதிமன்ற அமைப்புகள்**

- ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திலும் குடியரசுத் தலைவர் நியமிக்கப்படும் தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகள் உள்ளனர்
- உயர்நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையைப் பற்றி அரசியலமைப்பில் எதுவும் சொல்லப்படவில்லை

### நீதிபதிகள் நியமனம் (Appointment)

**சரத்து 217: உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் மற்றும் நிபந்தனைகள்**

- உயர்நீதிமன்ற நீதிபதிகளை குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறது
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் ஆளுநர் ஆகியோரைக் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார் குடியரசுத்தலைவர்
- மற்ற நீதிபதிகளை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் ஆளுநர் ஆகியோரைக் கலந்தாலோசித்து நியமனம் செய்கிறார் குடியரசுத்தலைவர்
- **இரண்டாவது நீதிபதி வழக்கு 1993** உயர்நீதிமன்ற நீதிபதி தெடர்பான எந்த நியமனமும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதல் இன்றிச் செய்ய முடியாது
- **மூன்றாவது நீதிபதி வழக்கு ( 1998**) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்து மட்டுமே கலந்தாலோசித்தல் என்பதில் அடங்காது

## தகுதிகள், உறுதிமொழி மற்றும் பதவிக்காலம் (Qualifications oath and salaries )

### தகுதிகள்
### (Qualifications)

- இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்
- இந்திய எல்லைப் பரப்பிறகுள் 10ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிருக்க வேண்டும்
- உயர்நீதிமன்றத்தில் 10 ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றிருக்க வேண்டும்

- நீதிபதியாவதற்குக் குறைந்தபட்ச வயது வரம்பு ஏதும் அரசியலமைப்பில் நிர்ணயிக்கப்படவில்லை

- சட்டத்தில் சிறந்த அறிவு பெற்றவரை நீதிபதியாக நியமனம் செய்வது தொடர்பாக அரசியலமைப்பில் எதுவும் சொல்லப்படவில்லை

## உறுதிமொழி (Oath)

- நீதீபதியான அமர்வதற்கு முன்பு ஆளுநர் அல்லது அவரால் நியமனம் செய்யப்பட்டவர் முன்பு உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்

## ஊதியம் மற்றும் படிகள் (Salaries and Allowances)

- ஊதியம் மற்றும் படிகள் யாவும் அவ்வப்போது நாடாளுமன்றாத்தால் நிர்ணயிக்கப்படுகிறது

- 2018ன் படி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் மாத ஊதியம் ரு. 2.50 இலட்சம் மற்ற நீதிபதிகளின் மாத ஊதியம் ரு. 2.25 இலட்சம்

- பதவியேற்ற பின்பு ஊதியத்தில் எந்த மாற்றமும் செய்ய இயலாது

- ஓய்வு பெறும் நீதிபதி கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50% ஓய்வூதியமாகப் பெறுகின்றார்.

## பதவிநீக்கம், பதவி நீக்கும் முறை மற்றும் மாறுதல் செய்தல் (Tenure, Removal And Transfer)

## பதவிக்காலம் (Tenure)

- 62 வயது நிறைவடையும் வரை பதவியில் தொடரலாம்

- பதவி விலக விரும்பினால் பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்

- நாடாளுமன்றத்தின் பரிந்துரையுடன் குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்

- நீதிபதியின் வயது தொடர்பாக எழும் கேள்விகளை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஆலோசனையுடன் குடியரசுத் தலைவர் முடிவு செய்கிறார் இதில் குடியரசுத்தலைவரின் முடிவு இறுதியானது

## நீதிபதிகளை நீக்கும் முறை (Removal of Judge)

❖ நாடாளுமன்றத்தில் அதே கூட்டுத்தொடரில் கொண்டுவரப்படும் தீர்மானத்தின் வாயிலாக குடியரசுத் தலைவரால் பதவீ நீக்கம் செய்யப்படலாம்

❖ செயல்பாடு அற்றவர் அல்ல நன்னடத்தை இல்லாதவர் என்ற அடிப்படையில்தான் நீதிபதிகளை பதவி நீக்கம் செய்ய முடியும்

❖ பதவி நீக்கம் செய்யும் வழிமுறைகள் யாவும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்யும் முறையைப் போன்றது

❖ நீதிபதிகள் விசாரணைச் சட்டம் (1968) உயர் நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான செயல்முறையை ஒழுங்குபடுத்துகிறது:

❖ 100 உறுப்பினர்கள் (லோக்சபா) அல்லது 50 உறுப்பினர்கள் (ராஜ்யசபா) கையெழுத்திட்ட நீக்கம் தீர்மானம் சபாநாயகர்க்கு வழங்கப்பட வேண்டும்.

❖ சபாநாயகர் தீர்மானம் ஏற்கலாம் அல்லது ஏற்க மறுக்கலாம்.

❖ தீர்மானம் ஒப்புதல் பெற்ற பிறகு சபாநாயகர் குற்றச்சாட்டுகளை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழுவை அமைக்க வேண்டும்.

**விசாரணை குழு உறுப்பினர்கள்**

- தலைமை நீதிபதி அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதி,
- உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி,
- ஒரு இதர நீதிபதி

❖ நீதிபதி தவறான நடத்தை அல்லது இயலாமையால் பாதிக்கப்பட்டவர் என்று குழு கண்டறிந்தால், அந்த தீர்மானம் பரிசீலனையில் சபை எடுத்துக்கொள்ளலாம்.

❖ பதவி தீர்மானம் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சபையிலும் சிறப்பு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட பிறகு, அந்த தீர்மானத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

❖ இறுதியாக, நீதிபதியை நீக்கி ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்கிறார்

## நீதிபதிகளை மாறுதல் செய்தல் (Transfer of Judges)

❖ உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற நீதிபதிகளை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாறுதல் செய்கிறார் குடியரசுத் தலைவர்

❖ மாறுதல் தொடர்பாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மூத்த நான்கு நீதிபதிகளோடு கலந்தாலோசிப்பதுடன் இரு மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளையும் கலந்தாலோசிக்க வேண்டும்

- ❖ அதாவது கலந்தாலோசித்தல் என்பதில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் கருத்து மட்டுமே அடங்காது

- ❖ 1977-ல் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்வது விதிவிலக்கான நடவடிக்கையாகவும், பொது நலன் கருதியும் மட்டுமே, குற்றசாட்டு மூலம் அல்ல என்று தீர்ப்பளித்தது.

- ❖ 1994ல் மீண்டும் உச்ச நீதிமன்றம், நீதிபதிகள் இடமாற்றத்தில் தன்னிச்சையாக இருப்பதைக் கண்டறிய நீதித்துறை மறுஆய்வு அவசியம் என்று கூறியது.

- ❖ மூன்றாவது நீதிபதிகள் வழக்கு (1998), உயர் நீதிமன்ற நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டால், உச்ச நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகளின் கொலீஜியத்துடன் இந்திய தலைமை நீதிபதி கலந்தாலோசிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது

**கூடுதல், மாற்று மற்றும் தற்காலிக நீதிபதிகள் நியமனம்**
**(Acting Additional And Retired Judges)**

**கூடுதல் மற்றும் தற்காலிக நீதிபதிகள் நியமனம்**

| **சரத்து 223: தற்காலிக தலைமை நீதிபதி நியமனம்** |
|---|

- குடியரசுத் தலைவர் ஒரு உயர்நீதிமனறத்தில் தகுதிபெற்ற உரிய நபர்களளை தற்காலிமாக இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் கூடுதல் நீதிபதிகளை நியமனம் செய்யலாம்

- அதே போல் தகுதிபெற்ற நபர்களை தற்காலிக நீதிபதிகளாக நியமனம் செய்யும் அதிகாரமும் குடியரசுத் தலைவருக்கு உண்டு

- நிரந்தர நீதிபதிகள் பதவியேற்கும் வரை இவர்கள் பணியில் தொடர்வார்கள்

- கூடுதல் நீதிபதிகள் அல்லது தற்காலிக நீதிபதிகள் எவரும் 62 வயதிற்கு மேல் பதவி வகிக்க இயலாது

**ஓய்வு பெற்ற நீதிபதிகள் (Retired Judge)**

- ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை தற்காலிக நீதிபதியாகப் பணியாற்றுமாறு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கேட்டு கொள்ளலாம்

- நியமனம் செய்யும் முன்பு குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெறுவதுடன் பணியாற்ற உள்ள நீதிபதியின் சம்மதத்தையும் பெற வேண்டும்

- நீதிபதியாகப் பணியாற்றும் போது நிரந்தர நீதிபதிக்கு உரிய அதிகாரங்கள் மற்றும் சலுகைகளைப் பெறுகின்றனர்



APPOLO STUDY CENTRE

**உயர்நீதிமன்றத்தின் சுகந்திரதன்மையை உறுதிப்படுத்தும் கூறுகள்**
**(Independence of High Court)**

1. **நியமன முறை (Mode of Appointment)**

- நீதிபதிகள் குழுவின் (Collegium) பரிந்துரையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நீதிபதிகளை நியமனம் செய்கிறார்
- நீதிபதிகள் நியமனத்தில் நிர்வாகத்துறையினர் தலையீடு ஏதும் இல்லை

2. **பாதுபாப்பான பதவிக்காலம் (Secirity of Tenure)**

- உயர்நீதமன்ற நீதிபதிகளின் பதவிக்காலம் பாதுகாப்பானது
- அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளின் படி மட்டுமே பதிவி நீககம் செய்யமுடியும்
- குடியரசுத் தலைவர் நியமனம் செய்யப்பட்டாலும் அவர் விரும்பும் வரை பதவியில் தொடரலாம் என்ற விதி நீதிபதிகளின் நியமனத்திற்கு பொருந்தாது

3. **நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் (Fixed Service Conditions)**

- உயர்நீதிமன்ற நீதபதிகள் ஊதியம் படிகள் மற்றும் ஓய்வூதியம் யாவும் நாடாளுமன்றத்தால் கால முறையாக நிர்ணயிக்கப்படுகின்றன
- பதவியேற்ற பின்பு ஊதியம் மற்றும் பிற படிகளை மாற்றியமைக்க இயலாது நிதி அவசர நிலை பிரகடனம் (Financial Emergency) தவிர்த்து

**4. மாநிலக் குவிப்பு நிதியிலிருந்து செலவு செய்தல்**
**(Expenses charged on Consolidated Fund of state)**

- நீதிபதிகளின் ஊதியம் படிகள் பணியாளர்களின் ஊதியம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் நிர்வாகக் செலவுகள் யாவும் மாநிலக் குவிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த நிதி அவையின் வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படுவதில்லை ஆனால் அவை இதன் மீது விவாதம் நடத்தலாம்
- அதே நேரம் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வூதியம் யாவும் இந்திய குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது

### 5. நீதிபதிகளின் நடத்தையை விவாதிக்க இயலாது (Conduct of Judge )

- நீதிபதிகளின் நன்னடத்தைச் சட்டமன்றத்திலோ அல்லர் நாடாளுமன்றத்திலோ விவாதிப்பதற்கு அரசியலமைப்பு தடை விதிக்கிறது

  ஆனால் குற்ற விசாரணைக்கான தீர்மானத்தின் போது (Impeachment Motion) விவாதிக்கலாம்

### 6. ஓய்வு பெற்ற பின்பு பணியாற்ற இயலாது (Ban on practice after Retirement)

- ஓய்வு பெற்ற பின்பு அதே நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்ற இயலாது

- ஆனால் உச்ச நீதிமன்றம் மற்றும் பிற உயர் நீதிமன்றங்களில் பணியாற்ற தடையேமில்லை

  ஆனால் கூடுதல் நீதிபதியாகப் பணியாற்றியவர்களுக்கு இது பொருந்தாது

### 7. அவமதிப்பிற்காகாத் தண்டிக்கும் அதிகாரம் (Power to Punish for its Contempt)

- நீதிமன்ற அவமதிப்பிற்காகத் தண்டனை வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு

- இது உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தை உறுதிபடுத்துகிறது

### 8. ஊழியர்களைச் சுகந்திரமாக நியமனம் செய்தல் (Freedom to Appoint Staff)

- நிர்வாக துறையின் தலையீடு இன்றி நீதிமன்றத்திற்குத் தேவையான பணியாளர்களை நியமத்துக் கொள்ளும் அதிகாரம் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு உண்டு

## உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் எல்லை வரம்பு (Jurisdiction and Powers of High Court)

### 1. முதலேற்பு அதிகார வரம்பு (Original Jurisdiction)

**சரத்து 225: முதலேற்பு அதிகார வரம்பு**

- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான பிரச்சனைகள்

- குடிமக்களின் அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துவது தொடர்பான வழக்குகள்

- அரசியலமைப்பிற்கு விளக்கம் தொடர்பான வழக்குகள்

- உயர் மதிப்புத் தொடர்பான உரிமையில் வழக்குகளில் நான்கு உயர்நீதிமன்றங்கள் ( கல்கத்தா பாம்பே மெட்ராஸ் மற்றும் டெல்லி ) முதலேற்பு அதிகார வரம்பைப் பெற்றுள்ளன

- 1973க்கு முன், கல்கத்தா, பம்பாய் மற்றும் மெட்ராஸ் உயர் நீதிமன்றங்களும் அசல் குற்றவியல் அதிகார வரம்பைக் கொண்டிருந்தன. இது குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 மூலம் முழுமையாக ஒழிக்கப்பட்டது.

## 2. நீதிப்பேராணை அதிகார வரம்பு (Writ Jurisdiction)

**சரத்து 226: நீதிப்பேராணை அதிகார வரம்பு**

- குடிமக்களின் அடிப்படை உரிமைகளைக் செயல்படுத்துதல் மற்றும் பிற நோக்கங்களுக்காக அரசியலமைப்பு உயர் நீதிமன்றத்தி நீதிப்பேராணை அதிகாரத்தை வழங்கியுள்ளது ( **பிரிவு 226)**

- அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே அது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும் ஆனால் அடிப்படை உரிமைகள் மற்றும் பிற சாதாரண சட்ட உரிமைகளைச் செயல்படுத்த வேண்டி உயர்நீதிமன்றத்தில் வழக்குச் தொடுக்கலாம்

- உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகார வரம்பு உச்ச நீதிமன்றத்தைவிட பரந்தது.

- சந்திரகுமார் - எதிர் - இந்திய யூனியன் வழக்கில் (1997) உச்ச நீதிமன்றம் மற்றம் உயர்நீதிமன்றத்தின் நீதிபோரனை வரம்பு என்பது அரசியலமைப்பின் அடிப்படை பண்பு எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

## 3. மேல்முறையீட்டு அதிகார வரம்பு (Appellate Jurisdiction)

- ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் அந்தக் மாநிலக் கீழமை நீதிமன்றங்களுக்கு மேல் முறையீட்டு நீதிமன்றமாகச் செயல்படுகிறது
- குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மீதான மேல்முறையீகள்
- மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றகளிலிருந்து மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகள்
- உயர்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பு என்பது முதலேற்பு அதிகார வரம்பை விட பரந்தது

## 4. மேற்பார்வை செய்யும் அதிகாரம் (Supervisory Jurisdiction)

| |
|---|
| சரத்து 227: கீழமை நீதிமன்றங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் |

- உயர்நீதிமன்றத்தன் அதன் கட்டுபாட்டில் உள்ள அனைத்துக் கீழமை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது
- நிர்வாகம் மற்றும் நீதித்துறை கண்காணிப்பு அதிகாரத்தைக் கொண்டுள்ளது

## 5. கீழமை நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துதல் (Control Over Subordinate Courts)

- உயர்நீதிமன்றம் கீழமை நீதிமன்றங்களளை நிர்வாக ரீதியாகக் கட்டுப்படுத்துகிறது
- ஆளுநர் மாவட்ட நீதிபதிகள் நியமனம் பதவி உயர்வு தொடர்பாக உயர் நீதிமன்றத்தை கலந்தாலோசிக்க வேண்டும்
- மாநில நீதிபணியில் (மாவட்ட நீதிபதி தவிர்த்து) உள்ள அலுவலர்களின் நியமனம் மாறுதல் பதவி உயர்வு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை போன்வற்றைக் கையாளுதல்
- உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை அனைத்து நீதிமன்றங்களும் பின்பற்ற வேண்டும்

## 6. ஆவண நீதிமன்றமாக (A Court of Record)

| |
|---|
| **சரத்து 215: உயர்நீதிமன்ற பதிவேடுகள்** |

- உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் செயல்முறைகள் மற்றும் செயல்கள் யாவுத் எதிர்கால நினைவிறகாகப் பதிவு செய்யப்படுகிறது
- நீதிமன்ற அவமதிப்பிற்காகத் தண்டனை வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு
- ஆவண நீதிமன்றம் என்ற அடிப்படையில் தன்னுடைய தீர்ப்பை மறு ஆய்வு செய்து கொள்ளும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு ஆனால் மறு ஆய்வு பற்றி அரசியலமைப்பில் ஏதும் சொல்லப்படவில்லை அதே நேரம் உச்சநீதிமன்றத்திற்கு இந்த அதிகாரம் அரசியலமைப்பு வழங்கியுள்ளது.

## 7. நீதிப்புனராய்வு அதிகாரம் (Power of judicial Review)

- சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் மத்திய மற்றும் மாநில அரசாங்கத்தின் நிர்வாக ஆணைகள் யாவும் அரசியலமைப்பிற்கு எதிரானதாக இருந்தால் அவை செல்லுபடி அற்றது என்று கூறும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு
- நீதிப்புனராய்வு பற்றி அரசியலமைப்பில் ஏதும் சொல்லப்படவில்லை என்றாலும் பிரிவுகள் 13 மற்றும் 226 அத்தகைய அதிகாரத்தை உயர்நீதிமன்றத்திற்கு வழங்குகின்றன.

| **Name** | **Year of establishment** | **Territorial Jurisdiction** | **Seat** |
|---|---|---|---|
| Allahabad | 1866 | Uttar Pradesh | Prayagraj Allahabad (Bench at Lucknow) |
| Andhra Pradesh | 2019 | Andhra Pradesh | Amaravati |
| Bombay | 1862 | Maharashta, Goa, Dadra and Nagar Haveli and Daman and Diu | Mumbai (Benches at Nagpur, Panaji and Aurangabad) |
| Calcutta | 1862 | West Bengal and Andaman and Nicobar Islands | Kolkata (Circuit Benches at Port Blair and jalpaigurl) |
| Chhattisgarh | 2000 | Chhattisgarh | Bilaspur |
| Delhi | 1966 | NCT of Delhi | New Delhi |
| Guwahati | 1948 | Assam, Nagaland, Mizoram and Arunachal Pradesh | Guwahati (Benches at Kohima, Aizawl and Itanagar) |
| Gujarat | 1960 | Gujarat | Ahmedabad |
| Himachal Pradesh | 1971 | Himachal Pradesh | Simla |
| Jammu and Kashmir & Ladakh | 1928 | Jammu and Kashmir and Ladakh | Srinagar and Jammu |
| Jharkhand | 2000 | Jharkhand | Ranchi |
| Karnataka | 1884 | Karnataka | Bengaluru (Benches at Dharwad and Gulbarga) |
| Kerala | 1956 | Kerala and Lakshadweep | Ernakulam |
| Madhya Pradesh | 1956 | Madhya Pradesh | Jabalpur (Benches at Gwalior and Indore) |

| | | | |
|---|---|---|---|
| Madras | 1862 | Tamil Nadu and Puducherry | Chennai (Bench at Madurai) |
| Manipur | 2013 | Manipur | Imphal |
| Meghalaya | 2013 | Meghalaya | Shillong |
| Orissa | 1948 | Odisha | Cuttack |
| Patna | 1916 | Bihar | Patna |
| Punjab and Haryana | 1947 | Punjab, Haryana and Chandigarh | Chandigarh |
| Rajasthan | 1949 | Rajasthan | Jodhpur (Bench at Jaipur) |
| Sikkim | 1975 | Sikkim | Gangtok |
| Telangana | 1954 | Telangana | Hyderabad |
| Tripura | 2013 | Tripura | Agartala |
| Uttarakhand | 2000 | Uttarakhand | Nainital |

## உயர்நீதிமன்றத்தை பற்றிய முக்கிய குறிப்புகள்
## (Important Fact of High Court)

### I. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர்நீதிமன்றம்
### I. Common High Court for more than two one state and Union territory

| | |
|---|---|
| பம்பாய் உயர்நீதிமன்றம் - 1862 | i. மகாராஷ்டிரா<br>ii. கோவா<br>iii. தாத்ரா மற்றும் நாகார் ஹவேலி<br>iv. டாமன் மற்றும் டையூ |
| ஹௌகாத்தி உயர்நீதிமன்றம் 1948 | i. அஸ்ஸாம்<br>ii. நாகலாந்து<br>iii. மிசோரம்<br>iv. அருணாச்சல பிரதேசம் |
| பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் 1947 | i. பஞ்சாப்<br>ii. ஹரியானா<br>iii. சண்டிகர் |

### II. ஒரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசம் ஆகியவற்றுக்கு பொதுவான ஒரு உயர்நீதிமன்றம்
### II. Common High Court for a one State and Union territory

| | |
|---|---|
| கல்கத்தா உயர்நீதிமன்றம் - 1862 | i. மேற்கு வங்காளம்<br>ii. அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் |

| | |
|---|---|
| கேரளா உயர்நீதிமன்றம்- 1956 | i. கேரளா<br>ii. இலட்த்தீவுகள் |
| சென்னை உயர்நீதிமன்றம்- 1862 | i. தமிழ்நாடு<br>ii. புதுச்சேரி |

**III. யூனியன் பிரதேசங்களின் உயர்நீதிமன்றங்கள்**
**III. High Court in Union Territory**

| | |
|---|---|
| டெல்லி உயர்நீதிமன்றங்கள் -1966 | தேசியதலைநகர் டெல்லி –அமைவிடம் புதுடெல்லி |
| ஜம்மு காஷ்மீர் மற்றும் லாடக் உயர்நீதிமன்றம் 1928 | ஜம்மு காஷ்மீர் (அமைவிடம் - ஸ்ரீநகர்)<br>லடாக் (அமைவிடம் - ஜம்மு) |

**IV. Chronological order (Ascending order)**

Bombay/Calcutta/ Madras High Court (1862)
பம்பாய்/ கல்கத்தா/ சென்னை உயர்நீதிமன்றம் (1862)

↓

Allahabad High Court (1866)
அலகாபாத் உயர்நீதிமன்றம் (1866)

↓

Karnataka High Court (1884)
கர்நாடகா உயர்நீதிமன்றம் (1884)

↓

Patna High Court (1906)
பாட்னா உயர்நீதிமன்றம் (1906)

↓

Jammu and Kashmir and Ladak High Court (1928)
ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றம். (1928)

↓

Orissa High Court (1948)
Gauhati High Court (1948)
ஒரிசா உயர்நீதிமன்றம் (1948)
ஹௌகாத்தி உயர்நீதிமன்றம் (1948)

## V Descending order (chronological order)

1. 1. Andhra Pradesh 2019 Amaravati
   ஆந்திரப் பிரதேசம் 2019 அமராவதி
2. Tripura 2013 Agartala
   திரிபுரா 2013 அகர்தலா
3. Manipur 2013 Imphal
   மணிப்பூர் 2013 இம்பால்
4. Uttarakhand 2000 Nainital
   உத்தரகாண்ட் 2000 நைனிடால்
5. Jharkhand 2000 Ranchi
   ஜார்கண்ட் 2000 ராஞ்சி
6. Chhattisgarh 2000 Bilaspur
   சத்தீஸ்கர் 2000 பிலாஸ்பூர்

**முக்கிய சட்டப்பிரிவுகள்**

| சட்டப்பிரிவுகள் | பொருள் |
|---|---|
| சரத்து 214 | மாநிலங்களுக்கான உயர்நீதிமன்றங்கள் |
| சரத்து 215 | உயர்நீதிமன்றத்தின் நீதி பதிவேடு |
| சரத்து 216 | உயர்நீதிமன்றத்தின் அமைப்புகள் |
| சரத்து 217 | உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் நிபந்தனைகள் |
| சரத்து 219 | உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிப்பிரமானம் |
| சரத்து 221 | நீதிபதிகளின் ஊதியங்கள் |
| சரத்து 222 | நீதிபதி ஒருவரை ஓர் உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்க்கு மாற்றப்படுதல் |
| சரத்து 223 | தற்காலிக தலைமை நீதிபதி நியமனம் |
| சரத்து 224 | கூடுதல் நீதிபதிகள் மற்றும் தற்காலிக நீதிபதிகள் நியமனம் |
| சரத்து 225 | உயர்நீதிமன்றங்களின் தீர்ப்பு வரம்புகள் |
| சரத்து 226 | உயர்நீதிமன்றங்கள் நீதிபோரணை பிறப்பிக்கும் அதிகாரம் |
| சரத்து 227 | உயர்நீதிமன்றம் அதன் கீழ் நீதிமன்றங்களை கண்காணிக்கும் அதிகாரம் |
| சரத்து 228 | சில வழக்குகள் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றபடுதல் |
| சரத்து 229 | அதிகாரிகள் ஊிழியர்கள் மற்றும் உயர்நீதமன்றங்களின் செலவுகள் |
| சரத்து 230 | யூனியன் பிரதேசங்களுக்கு உயர்நீதிமன்றகளின் அதிகாரம் நீட்டிப்பு |
| சரத்து 231 | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவானதொரு உயர்நீதிமன்றதை ஏற்படுத்துதல் |

முக்கிய சட்டதிருத்தம்

- 7வது சட்டத்திருத்தம்- 1956 இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவான உயர்நீதிமன்றம்
- 42வது சட்டத்திருத்தம் 1976 உயர்நீதிமன்ற அதிகாரங்கள் மறுபரிலைனை
- 43வது சட்டதிருத்தம் திரும்பப் பெறப்பட்ட உயர்நீதிமன்ற அதிகாரங்கள்

## சார்நிலை நீதிமன்றங்கள் (Subordinate Courts)

- மாநில நீதித்துறை என்பது உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களை உள்ளடக்கியது

- இவை கீழமை நீதிமன்றங்கள் என்றும் அழைக்கப்படுகிறது (Lower Ciurts)

## அரசியலமைப்பு நிலை CONSTITUTIONAL PROVISIONS

பகுதி IV பிரிவுகள் 233 -237 சார்நிலை நீதிமன்றங்களை ஒழுங்குபடுத்தி அதன் சுகந்திர தன்மையை உறுதிப்படுத்துகிறது

## நியமனம் Appointment of District Judges

- மாவட்ட நீதிபதிகளின் பதவி உயர்வு யாவும் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையுடன் ஆளுநரால் மேற்கொள்ளப்படுகிறது

- இதர நீதிபதிகள் நியமனம் யாவும் உயர்நீதிமன்ற மற்றும் மாநில பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனையுடன் ஆளுநரால் மேற்கொள்ளப்படுகிறது

## கட்டுபாடுகள் (Control over Subordinate Courts )

- மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் சார்நிலை நீதிமன்றங்கள் யாவும் உயர்நீதிமன்றத்தின் கட்டுபாட்டுன் கீழ் வருகின்றன.

- சார்நிலை நீதிமன்றங்கள் அமைப்பு எல்லை மற்றும் பெயரிடல் யாவும் மாநில அரசால் தீர்மானிக்கப்படுகிறது

## தீர்ப்பாயங்கள் (Tribunals)

- அசல் அரசியலமைப்பின் தீர்பாயங்களைப் பற்றி எதுவும் செல்லப்படவில்லை

- 42வது அரசியலமைப்பின் திருத்தத் சட்டம் 1976 மூலம் பகுதி XIV-A சேர்க்கப்பட்டது

- இந்தப் பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டது. பிரிவு 323 –A நிர்வாகத் தீர்ப்பாயம் பிரிவு 323 B மற்ற விசயங்களுக்கான தீர்பாயங்கள்

- ❖ மத்திய மாநில உள்ளாட்சி பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அலுவலர்கள் தேர்வு மற்றும் பணிக்கட்டுபாடுகள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கிறது

- ❖ அதாவது உரிமையில் மற்றும் உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் தீர்ப்பாயங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன

- ❖ பாதிக்கப்பட்ட பொது ஊழிர்களுக்கு விரைவான மற்றும் அதிக செலவில்லாத நீதி கிடைக்க செய்கிறது

## முக்கிய சட்டப்பிரிவுகள்

| சட்டப்பிரிவுகள் | பொருள் |
|---|---|
| சரத்து 233 | மாவட்ட நீதிபதிகள் நியமனம் |
| சரத்து 234 | மாவட்ட நீதிபதிகள் தவிர நீதிப்பணிக்கான மற்ற அதிகாரிகள் நியமனம் |
| சரத்து 235 | துணை நீதிமன்றங்கள் மீதான கட்டுபாடுகள் |
| சரத்து 236 | பொருள் விளக்கம் |
| சரத்து 237 | குறிப்பிட்ட மேஜிஸ்ட்ரேட்டுக்கு வழங்கப்படும் சலுகைக்கான விண்ணப்பம் |

### அரசியலமைப்பு விளக்கத்தின் முக்கியமான கோட்பாடுகள்

## 1. பிரிக்கப்படும் தன்மைக் கோட்பாடு Doctrine of Severability

- பிரிக்கக்கூடிய தன்மை பற்றிய கோட்பாடு பிரிக்கப்படும் தன்மை கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது. அரசியலமைப்பிற்கு முரணானதாக அறிவிக்கப்பட்ட சட்டங்களின் செல்லுபடியாகும் பிரச்சினையை தீர்க்க இந்த கோட்பாடு உச்சநீதிமன்றத்தால் வடிவமைக்கப்பட்டது.
- சட்டத்தின் ஒரு பகுதி அரசியலமைப்பிற்கு எதிரானது என்று அறிவிக்கப்படும்போது, அந்தச் சட்டம் முழுவதையும் செல்லாது என்று அறிவிக்க வேண்டுமா அல்லது அந்தச் சட்டத்தின் ஒரு பகுதியை மட்டும் செல்லாது என்று அறிவிக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.
- இந்த கோட்பாட்டின் படி, சட்டத்தின் குற்றமான விதியை அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து பிரிக்க முடியுமானால், சட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே, சட்டத்தின் முழுமையும் செல்லாது என்று அறிவிக்கப்பட வேண்டும்.
- மேலும் வேறு விதமாக கூறவேண்டுமானால், சட்டத்தின் செல்லாத பகுதியை மீதமுள்ளவற்றிலிருந்து பிரிக்க முடிந்தால், மீதமுள்ளவை செல்லுபடியாகவும் செயல்படக்கூடியதாகவும் இருக்கும்.

## முக்கியமான வழக்குகள் (Important Case)

| வ எண் | வழக்கு (ஆண்டு) | உச்ச நீதிமன்ற தீர்ப்பு |
|---|---|---|
| 1 | ஏ. கே. கோபாலன் Vs. சென்னை மாநிலம் (1950) | 1950 ஆம் ஆண்டின் தடுப்புக்காவல் சட்டத்தின் 14வது பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தின் 22வது பிரிவின் கீழ் வரும் அடிப்படை உரிமையை மீறுவதாகக் கருதி நீக்கப்பட்டது. மீதமுள்ள சட்டம் செல்லுபடியாகும் மற்றும் செல்லுபடியாக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. |
| 2 | மினெர்வா மில்லா Vs. இந்திய ஒன்றியம் (1980) | 1976 ஆம் ஆண்டின் 42வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் பிரிவுகள் 4 மற்றும் 55 ஆகியவை நாடாளுமன்றத்தின் திருத்த அதிகாரத்தை மீறி இருப்பதாகக் கருதி நீக்கிவிட்டது. மீதமுள்ள திருத்தச் சட்டங்கள் செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டது. |

**2. உரிமை மறுப்பு கோட்பாடு (Doctrine of waiver)**

- உரிமை மறுப்பு கோட்பாடு" (Doctrine of waiver) என்பது ஒரு நபர் தனக்கு கிடைக்க வேண்டிய உரிமை அல்லது சலுகையைத் துறந்துவிட அல்லது கைவிட்டுவிட முடியும் என்ற அடிப்படையில் உருவாகிறது.
- உரிமை மறுப்பு கோட்பாடு" (Doctrine of waiver) என்பது ஏற்கனவே இருக்கும் சட்டபூர்வமான உரிமைகளான நன்மை, சலுகை, கோரிக்கை அல்லது சிறப்புரிமை போன்றவற்றை ஒருவர் தாமாகவே கைவிட்டு விடுவது அடங்கும்.
- உரிமை மறுப்பு கோட்பாடு" (Doctrine of waiver) ,இந்தியாவில் அடிப்படை உரிமைகளுக்கு இந்திய கோட்பாடு பொருந்தாது என்பதை கவனிக்க வேண்டும். அதாவது, இந்தியாவில் ஒரு குடிமகன் தனது அடிப்படை உரிமைகளைத் துறந்துவிட முடியாது.

**தள்ளுபடி கோட்பாடு தொடர்பான முக்கியமான வழக்குகள்:**
**(Important case relating to the doctrine of waiver)**

| வ எண் | வழக்கு (ஆண்டு) | உச்ச நீதிமன்ற தீர்ப்பு |
|---|---|---|
| 1 | பெஹ்ராம் குர்ஷித் பெசிகாகா Vs. பம்பாய் மாநிலம் (1954) | ஒரு குற்றவியல் வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபர் தனது அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுத்து , குற்றவாளி என்று நிரூபிக்க முடியாது என்று அது கூறுகிறது. |
| 2 | பஷேஷர் நாத் Vs. வருமான வரி ஆணையர் (1958) | வரி செலுத்துவதற்கான ஒப்பந்தத்தில் தானாக முன்வந்து மனுதாரர் 14வது பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தனது அடிப்படை உரிமையை தள்ளுபடி செய்துள்ளார் என்ற பிரதிவாதியின் வாதத்தை அது நிராகரித்தது. அடிப்படை உரிமைகளை அசைக்க முடியாது என்ற மனுதாரரின் வாதத்தை அது உறுதி |

| | | |
|---|---|---|
| | | செய்தது. |
| 3 | ஓல்கா டெலிஸ் Vs. பம்பாய் மாநகராட்சி (1985) (நடைபாதையில் வசிப்பவர்கள் வழக்கு என்று பிரபலமாக அறியப்படுகிறது) | ஒரு நபர் தனது எந்தவொரு செயலின் மூலமாகவும் அவருக்கு வழங்கப்பட்டுள்ள எந்த அடிப்படை உரிமைகளையும் தள்ளுபடி செய்ய முடியாது என்றும், அரசியலமைப்பிற்கு எதிராக எந்த தடையும் இருக்க முடியாது என்றும் கூறுகிறது. அடிப்படை உரிமைகளை வழங்குவதன் மூலம் அரசியலமைப்பு அடைய விரும்பும் உயர்ந்த நோக்கம் தனிநபருக்கு நன்மை செய்வது மட்டுமல்ல, சமூகத்தின் பெரிய நலன்களைப் பாதுகாப்பதும் ஆகும். |
| 4 | நார் சிங் பால் Vs. இந்திய ஒன்றியம் (2000) | அரசியலமைப்பின் கீழ் உள்ள அடிப்படை உரிமைகளை பறிக்க முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அடிப்படை உரிமைகளை சமரசம் செய்து கொள்ள முடியாது என்றும், அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு எதிராக எந்த தடையும் இருக்க முடியாது என்றும் அது வலியுறுத்தியுள்ளது. |

## 3. கிரகணத்தின் கோட்பாடு (Doctrine of Eclipse)

- கிரகணத்தின் கோட்பாடு அடிப்படை உரிமைக்கு முரணான அரசியலமைப்பிற்கு முந்தைய சட்டம் அதன் தொடக்கத்திலிருந்தே செல்லுபடியாகலும் அல்லது வெற்றிடமாகமலும் இல்லை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.
- அத்தகைய சட்டம் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாளிலிருந்தே செயலற்றதாகிவிடும்.
- இது அடிப்படை உரிமைகளால் மறைக்கப்பட்டு அல்லது கிரகணமாகி, செயலற்ற நிலையில் உள்ளது, ஆனால் முற்றிலும் அகற்றபடவில்லை இது சட்டப் புத்தகத்திலிருந்து முற்றிலுமாக அழிக்கப்படவில்லை

## கோட்பாட்டின் உருவாக்கம் (Formulation of the Doctrine)

- கிரகணக் கொள்கை 1955 ஆம் ஆண்டில் பிகாஜி வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.
- இந்த வழக்கில் 1939 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 43, 1947 ஆம் ஆண்டின் மத்திய மாகாணங்கள் மற்றும் பேரர் மோட்டார் வாகன (திருத்தச் சட்டம்) மூலம் திருத்தப்பட்டது.
- இந்த விதி தனிப்பட்ட செயல்பாடுகளை தவிர்த்து, மோட்டார் போக்குவரத்து வணிகத்தை மாநில அரசு கையகப்படுத்த அதிகாரம் அளித்தது.
- 1950 ஆம் ஆண்டில் அரசியலமைப்புச் சட்டம் தொடங்கியதன் மூலம் 19(1)(g) பிரிவின் கீழ் அடிப்படை உரிமையை மீறியதால் இது செல்லாததாக மாறியது.பின்னர், முதல் திருத்தச் சட்டம் (1951) பிரிவு 19(6) ஐத் திருத்தியது மற்றும் அரசு எந்த தொழிலையும் வியாபாரத்தையும் தனிநபர்களுடன் போட்டியாகவோ அல்லது தனித்தனியாகவோ எடுத்துக்கொள்ள அனுமதித்தது.

- இதன் விளைவாக மாநில அரசு மோட்டார் போக்குவரத்து வணிகத்தை கையகப்படுத்தும் அறிவிப்பை வெளியிட்டது.
- இந்த அறிவிப்பு உச்ச நீதிமன்றத்தில் சவால் விடப்பட்டது.
- மாநில அரசு ஜனவரி 26, 1950 முதல் ஜூன் 18, 1951 வரை, மோட்டார் வாகனச் சட்டம் (1939) பிரிவு 43 செல்லாது என்பதை வாதிட்டது, ஆனால் 19(6) பிரிவை முதல் திருத்தச் சட்டம் (1951) மூலம் திருத்தம் செய்தது அதே பிரிவு 43 ஐ மீண்டும் செல்லுபடியாக்கியது.
- இறுதியாக, உச்ச நீதிமன்றம் தாக்கப்பட்ட சட்டம் அடிப்படை உரிமையால் தற்காலிகமாக மறைக்கப்பட்டிருந்தாலும், 19(6) பிரிவு திருத்தம் நிழலை நீக்கியது என்று தீர்ப்பளித்தது.
- வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கிரகணக் கொள்கையைப் பயன்படுத்தி அறிவிப்பின் செல்லுபடியை நீதிமன்றம் உறுதி செய்தது.

## 4. பிராந்திய இணைப்பு கோட்பாடு (Doctrine of territorial nexus)

### கோட்பாட்டின் பொருள்

- பிராந்திய உறவின் கோட்பாடு, பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களின் அளவைக் கையாளும் பிரிவு 245 உடன் தொடர்புடையது.
- இந்தியாவின் முழுப் பகுதிக்கும் அல்லது எந்தப் பகுதிக்கும் சட்டங்களை இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. கூடுதலாக, இது ”வெளிநாட்டுச் சட்டத்தையும்” உருவாக்க முடியும். பாராளுமன்றச் சட்டங்கள் இந்திய எல்லைக்குள் இருக்கும் நபர்கள் மற்றும் சொத்துக்களுக்கு மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள இந்திய குடிமக்கள் மற்றும் அவர்களது சொத்துக்களுக்கும் பொருந்தும் என்பதை இது குறிக்கிறது.
- மாநிலத்தின் முழு அல்லது எந்தப் பகுதிக்கும் சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநில சட்டமன்றத்திற்கு உள்ளது. பாராளுமன்றத்தைப் போல ஒரு மாநில சட்டமன்றம் ”வெளிநாட்டுச் சட்டத்தை” உருவாக்க முடியாது.
- மேற்கூறியவற்றிலிருந்து, மாநில சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மாநிலத்திற்கு வெளியே பொருந்தாது என்பது தெளிவாகிறது.

## 5. பகுதி மற்றும் சாராம்சக் கொள்கை: (Doctrine of Pith and Substance)

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246வது பிரிவு பாராளமன்றத்திற்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் இடையே சட்டவாக்க அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்கிறது.
- இது மூன்று பட்டியல்களில் வெவ்வேறு சட்டப் பொருள்களை வகைப்படுத்துகிறது: பட்டியல் 1 (யூனியன் பட்டியல்), பட்டியல் 2 (மாநில பட்டியல்) மற்றும் பட்டியல் 3 (இணை பட்டியல்). அதன்படி, நாடாளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றம் தங்கள் அந்தந்த அதிகார எல்லைக்குள் சட்டங்களை இயற்ற வேண்டும், மற்றொன்றின் அதிகார எல்லைக்குள் தலையிடாமல் இருக்க வேண்டும்.

- தலையிடும் பட்சத்தில், அது இயற்றிய சட்டத்தின் செல்லுபடியை பகுதி மற்றும் சாராம்சக் கொள்கை (Doctrine of Pith and Substance) மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

## 6. மறைமுக சட்டத்தின் கோட்பாடு: (Doctrine of colourable Legislation)

- இந்திய அரசியலமைப்பு (சட்டக்கூறு 246) பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் இடையே சட்டவாக்க அதிகாரத்தைப் பிரித்து வழங்குகிறது. ஏழாவது அட்டவணையில் மத்திய பட்டியல், மாநில பட்டியல் மற்றும் பொது பட்டியல் என மூன்று பட்டியல்களில் கீழ் சட்டவாக்கப் பொருள்களை பட்டியலிடுகிறது. இதன்படி, பாராளுமன்றமும் மாநில சட்டமன்றமும் தங்கள் தனித்தனி சட்டவாக்க அதிகார எல்லைக்குள் செயல்பட வேண்டும், மற்றொன்றின் அதிகார எல்லைக்குள் தலையிடக் கூடாது.
- ஆனால், சில சமயங்களில், ஒரு சட்டமன்றம் சட்டப்படி தனது அதிகாரத்திற்குள் அடங்குவது போல் தோன்றினாலும், உண்மையான நோக்கமும் விளைவும் அதன் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தால், அந்த சட்டம் செல்லாது என்று அறிவிக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சட்டத்திற்கு கொடுக்கப்பட்ட பல்வேறு தோற்றம் (அதன் அதிகார எல்லைக்குள் கொண்டு வருவதற்காக சட்டமன்றத்தால்) அதை செல்லாது என்ற அறிவிப்பில் இருந்து காப்பாற்ற முடியாது. அத்தகைய சட்டம் மறைமுக சட்டம் (colourable legislation) என்று கூறப்படுகிறது

### 7. முன்னோடி கோட்பாடு (அல்லது உற்று நோக்கும் தீர்மானத்தின் கோட்பாடு)

முன்னோடி கோட்பாடு (அல்லது ஸ்டேர் டெசிசிஸின் கோட்பாடு) ஒரு ஆங்கிலக் கோட்பாடு. இந்த கோட்பாட்டின் படி, கீழ் நீதிமன்றங்கள் உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்குக் கட்டுப்படுகின்றன.

**அடிப்படை கோட்பாடு:**

- ❖ முன்னோடிகளின் கோட்பாடு அரசியலமைப்பின் 141 வது பிரிவில் இணைக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட சட்டம், இந்திய பிரதேசத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் கட்டாயமாகும்.

- ❖ ஆகவே, இந்தியாவில் உயர் நீதிமன்றங்கள் உட்பட அனைத்து நீதிமன்றங்களும், தீர்ப்பாயங்களும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும்.

## 8. மண்டல ஆக்கிரமிப்பு கோட்பாடு (Doctrine of Occupied Field)

- மண்டல ஆக்கிரமிப்பு கோட்பாடு என்பது பாராளமன்றம் ஒரு குறிப்பிட்ட விசயம் குறித்து சட்டம் இயற்றி, அந்த மண்டலத்தை ஆக்கிரமிக்கும்போது, மாநில

சட்டமன்றம் அந்த மண்டலத்தில் எந்த சட்டத்தையும் இயற்ற அதிகாரம் பெறாது என்று கூறுகிறது.

- வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த கோட்பாட்டின் படி, ஒரு சட்டத் துறை ஏற்கனவே ஒரு மத்திய சட்டத்தால் ஆக்கிரமிக்கப்பட்டால், அந்தத் துறையில் ஒரு மாநில சட்டத்திற்கு இடமில்லை.
- மண்டல ஆக்கிரமிப்பு கோட்பாட்டை மறைமுக மண்டலக் கோட்பாடு (Doctrine of Covered Field) என்றும் அழைக்கபடுகிறது

## 9. முன்னோக்கு மேலாண்மை மீறுதல் கோட்பாடு (Doctrine of Prospective Overruling)

- வருங்கால ஆட்சியை மீறுதல் என்ற கோட்பாடு அமெரிக்க நாட்டின் கோட்பாடாகும்.
- கோலக் நாத் வழக்கில் (1967) உச்சநீதிமன்றத்தால் முதன்முதலில் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டது.
- ஒரு நீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்பை ரத்து செய்து புதிய தீர்ப்பு வழங்கும்போது, அந்த புதிய தீர்ப்பை எதிர்கால நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் வகையில் கட்டுப்படுத்த முடியும். இதன் மூலம் கடந்த கால நடவடிக்கைகளின் உத்தரவுகளை பாதிக்காமல் இருக்க வேண்டும். இதுவே முன்னோக்கு மேலாண்மை கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.
- முன்னோக்கு மேலாண்மை கோட்பாடு " (Doctrine of Prospective Overruling) என்பது ஒரு நீதிமன்றம் எதிர்கால நடவடிக்கைகளுக்கு மட்டுமே தனது முந்தைய தீர்ப்பை மாற்றியமைக்க அனுமதிக்கும் ஒரு கோட்பாடாகும்.

## 10. இணக்கமான கோட்பாடு (Doctrine of Harmonious)

- இந்திய அரசியலமைப்பின் வெவ்வேறு விதிகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும்போது, நீதிமன்றங்கள் அவற்றை விரிவாக விளக்க வேண்டும். இதன் மூலம் முரண்பாடான விளைவுகளைத் தவிர்க்க முடியும். இது இணக்கமான கோட்பாடு (Doctrine of Harmonious Construction) என்று அழைக்கப்படுகிறது.
- .இந்த கோட்பாடு மோதலைத் தவிர்ப்பதற்கான விதி என்றும் அழைக்கப்படுகிறது.

### கோட்பாட்டின் பயன்பாடு

இந்த மோதலைத் தீர்க்க, உச்ச நீதிமன்றம் இணக்கமான கட்டுமான கோட்பாட்டினை பயன்படுத்தியுள்ளது.

1. அடிப்படை உரிமைகளுக்கும், மற்றும் அரசின் கொள்கைகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்

2. அடிப்படை உரிமைகளுக்கும், அரசியல் சாசன திருத்த நடைமுறைக்கும் இடையில்.

## 11. தாராளவாத விளக்கக் கோட்பாடு (Doctrine of Liberal Interpretation)

- தாராள விளக்கக் கொள்கையின்படி, இந்திய அரசியல் சாசனத்தை விரிவான மற்றும் தாராளமான முறையில் விளக்க வேண்டும், குறுகிய மற்றும் நெறிபடுத்தப்பட்ட பகுதி அல்ல
- வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அரசியல் சாசனத்தை விளக்குபவர்கள் விரிவான மற்றும் தாராளமான மனநிலையுடன் இருக்க வேண்டும்.
- தாராள விளக்கக் கொள்கை, அரசியல் சாசனத்தை வெறும் சட்டமாக அல்ல, சட்டங்கள் உருவாக்கப்படும் இயந்திரமாகக் கருதுகிறது.
- அரசியல் சாசனம் ஒரு உயிருள்ள மற்றும் இயங்கக்கூடிய ஒன்று என்று கருதுகிறது, எனவே அதை விரிவாகவும் தாராளமாகவும் விளக்க வேண்டும்.

## 12. உறுதிமொழி எஸ்டோப்பலின் கோட்பாடு (Doctrine of Promissory Estoppel)

- உறுதிமொழி எஸ்டோப்பல் என்பது ஒரு சட்டக் கோட்பாடாகும், இது ஒரு நபர் ஒரு ஒப்பந்தத்தால் உறுதியளிக்கப்படாவிட்டாலும், அவர்கள் அளித்த வாக்குறுதியின் மீது திரும்பச் செல்வதைத் தடுக்கிறது. அக்னிபாத் திட்டம் தொடர்பான டெல்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்ததன் காரணமாக இந்த கோட்பாடு செய்திகளில் வந்தது

## 13. லேக்கேசின் கோட்பாடு (Doctrine of Laches)

- லாச்சஸ் என்றால் தாமதம் பொருள்

- இதன் விளைவு என்பது உரிமையை உறுதிப்படுத்துவதில் நீண்ட கால தாமதம் அல்லது உரிமைகோரல் பாதகமான தரப்பைப் பாதித்திருந்தால், சட்டப்பூர்வ உரிமை அல்லது கோரிக்கை செயல்படுத்தப்படாது அல்லது அனுமதிக்கப்படாது.

- ஒரு சட்டபூர்வ மனு கோரிக்கையின் நியாயமற்ற தாமதம், புறக்கணிப்பு ஆகியவை அடங்கும், இவை அனைத்தும் சேர்ந்து எதிரியை காயப்படுத்துகின்றன.

- நீதி கேட்டு வருபவர் நியாயமான காலத்திற்குள் நீதிமன்றத்தை நாடுவது அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே.

- கால அவகாசம் என்பது சமத்துவத்தை மீறுவதோடு, நீதி என்ற கருத்துக்கு எதிராகிறது

APPOLO STUDY CENTRE